Date : 15.06.2026.

வா.சா.2 : நாராயணன்

<u>வா.சா. 2 மீண்டும் அழைக்கப்பட்டு 1 மற்றும் 5 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வழக்கு இந்த நீதிமன்றத்தில் நடப்பதாக யார் சொன்னார் என்றால் கமலநாதன் வழக்கறிஞர் கூறினார். வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளனர் என்றால் சொத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனது சொந்த ஊர் புதுக்குளம் ஆகும். மேற்படி கோவில் இருப்பது இட்டமொழி அருகே ஆகும். எங்கள் ஊருக்கும் தாவா கோவிலுக்கும் 7 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் மேற்படி விலாசத்தில் குடியிருந்து வருவதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த பகுதியில் வசித்துவரவில்லை என்பதால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் வாதி இலங்காமணி கோவிலில் நான் பூசாரி இல்லை என்றால் சரிதான். நான் பரம்பரை பூசாரி என்றால் சரிதான். நான் சொல்வது பொய் என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பிரமான வாக்குமூலத்தில் தாவா சொத்து சம்மந்தமாக ஆவணங்கள் பார்த்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன். அதன் பட்டா கோவில் பெயரில் உள்ளது. அவ்வாறு ஆவணங்கள் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பட்டாவில் கோவில் பெயர் இல்லை என்றால் தெரியாது. பட்டாவில் கோவில் பெயர் இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணத்தில் சரவணமார்த்தாண்டம் பெயர் உள்ளது. கோவில் நிலம் மற்றும் அதை சுற்றியுள்ள நிலம் சரவணமார்த்தாண்டத்தின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவர்கள்தான் கோவிலுக்கு கொடுத்தார்கள். 1ம் பிரதிவாதி வகையறாவிடம் தாவா சொத்தினை கோவிலுக்கு கிரையம் கேட்டோம் என்றால் சரியல்ல. என்னுடைய தூண்டுதலின் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கோவில் 700 வருடங்கள் பழமையானது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது சாட்சிய பிரமாணத்தில் கமலநாதன் வழக்கறிஞர் அலுவலகத்தில் தட்டச்சு

செய்யப்பட்டதில் நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். தகவல் நான் கூறவில்லை என்றால் சரிதான். சண்முக சுந்தரம்தான் வழக்கறிஞரிடம் என்னை அழைத்து சென்றார் என்றால் சரிதான். கோவிலுக்கும் பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.